# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No. 457/2023

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 1 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | பாபு |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 20.03.2024

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் காந்திகிராமத்தில் குடியிருந்து நான் கரூர் பிரியாணி கார்னர் என்ற பெயரில் சொந்தமாக ஹோட்டல் வைத்துள்ளேன். சுமார் 2021 ம் வருடம் தேதி மாதம் சரியாக ஞாபகமில்லை. டிஎன்74 எஸ் 0335 எக்சல் ஹெவிடியூட்டி என்ற இருசக்கர வாகனத்தை

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

சொந்த உபயோகத்திற்காக வாங்கி பயன்படுத்தி வந்தேன். என்னுடைய கடைக்கு வேலைக்காக அம்மா அப்பா யாரும் இல்லையென்று வேலை வேண்டுமென்று கேட்டார். அந்த நபர் ஆஜர் எதிரிதான். அவரை என்னுடைய கடைக்கு வேலைக்காக வைத்துக்கொண்டேன். அவர் தன்னுடைய கையில் காயம் ஏற்பட்டதாகவும், அதற்காக பேன்டேஜ் வாங்க செல்வதாக இருசக்கர வாகனத்தைக் கேட்டார். அவர் கடையில் வேலைபார்த்த நபர்கள் வைத்திருந்த இரண்டு செல்போன்களையும் எடுத்து இருசக்கர வாகனத்தையும் எடுத்துக்கொண்டு சென்றவர் திரும்பி வரவில்லை. பின்னர் ஆஜர் எதிரியை தேடிப்பார்த்தோம். கிடைக்கவில்லை. இது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1. பின்னர் 9 வது மாதம் போலிசார் எதிரியை பிடித்துவிட்டதாகவும், இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்டும்படி வரச்சொன்னார்கள். காவல்நிலையம் சென்று இருசக்கர வாகனம், 2 செல்போன்களை அடையாளம் காட்டினேன். ஆஜர் எதிரி என்னுடைய கடையில் இரண்டு நாள் வேலை பார்த்தவர் என்று கூறினேன். போட்டோவில் காட்டப்படும் டிவிஎஸ் ஹெவிடியுட்டி வாகனம் என்னுடையது. போட்டோவில் உள்ள டிவிஎஸ் ஹெவிடியுட்டி வாகனம் அ.சா.பொ.1 போட்டோவில் உள்ள 2 செல்போன்கள் என்னுடையது. அவைகள் முறையே அ.சா.பொ.2,3 ஆக குறியிடப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No. 457/2023

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 2 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | ராஜ்குமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 20.03.2024

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் சின்னாண்டான்கோவில் முதல் தெருவில் குடியிருந்து நான் அ.சா.1 கரூர் பிரியாணி கார்னர் என்ற கடையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும், அவர் எங்களுடன் வேலை பார்த்தவர். எங்களுடைய கடையில்

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

உபயோகத்திற்காக வைத்திருந்த டிஎன்74 எஸ்0335 என்ற எக்சல் ஹெவிடியுட்டி இருசக்கர வாகனம் 04.02.2021 ம் தேதி என்னுடைய விவோ y 12 s என்ற செல்போனையும் poco x3 என்ற செல்போனையும் இருசக்கர வாகனத்தையும் எடுத்துக்கொண்டு சென்றவர் திரும்பி வரவில்லை. அவரை தேடிப் பார்த்தும் கிடைக்கவில்லை. இது சம்மந்தமாக 20 ம் தேதி அ.சா.1 கரூர் நகர குற்றபிரிவில் புகார் கொடுத்தார். பின்னர் 9 வது மாதம் கரூர் நகர வோலிசார் வரசொன்னதின் பேரில் அ.சா.1 டன் நானும் சென்றேன். அங்கு இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்டினோம். என்னுடைய செல்போனையும் அடையாளம் காட்டினோம். ஆஜர் எதிரி அங்கு இருந்தார். அவரிடமிருந்து கைப்பற்றியதாக போலிசார் கூறினார். அவர் கடையில் வேலை பார்த்து வந்ததாக கூறினோம். என்னிடம் காட்டப்படும் விவோ y 12s செல்போன் என்னுடையது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.